# செருப்புத் தைப்பவரின் மகன்

இது போலந்து நாட்டுக்கதை.



SKOMAKERSØNNEN

- En polsk fortelling

ஒரு ஊரில் ஒரு சிறுவன் தனது தந்தையுடன் வசித்து வந்தான். அவன் தந்தை செருப்புத்தைப்பவர். தந்தையோ மிகவும் கோபக்காரரர். மகனை எப்பொழுதும் கடிந்தபடியே இருப்பார். ஒருநாள் தந்தைக்கு மிகவும் கோபம் வந்ததால் மகனை வீட்டை விட்டு துரத்தி விட்டார்.

Det var en gang en gutt som bodde sammen med sin far som var skomaker. Faren var en sinnatagg og kjeftet på gutten hele tida. En dag ble faren så sint, at han kastet ut gutten sin hjemmefra.



மகன் சிறிதளவு உரொட்டித் துண்டை எடுத்துக் கொண்டு வீட்டை விட்டுப் போனான். அவன் நடநட என நடந்து ஓர் காட்டிற்குள் வந்து சேர்ந்தான். அந்தக் காட்டின் பற்றைகள், புதர்களில் நடந்து களைத்து விட்டான். இறுதியில் ஓர் இடத்தில் இளைப்பாற அமர்ந்தான்.

Gutten fikk bare med seg litt brød, og dro sin vei. Han gikk og gikk, helt til han kom til en skog.

Han gikk gjennom busker og kratt, og til slutt ble han så sliten at han la seg ned for å hvile.





திடீரென அவ்விடத்தில் எறும்புகள் குறுக்கும் நெடுக்குமாக இடிபட்டு ஓடுவதைக் கண்டான். “ என்ன நடந்திருக்கும்? என யோசித்தான்.

Plutselig så han masse maur som løp rundt til alle kanter, de krasjet med hverandre og det var virkelig kaos. «Hva har skjedd?» tenkte gutten.

ஆகா. அங்கே ஒரு எறம்புப் புதர் ஒன்று உடைந்திருப்பதைக் கண்டான்.

“வீட்டை இழந்தால் எப்படி இருக்கும் என எனக்குத் தெரியும்” எனக் கூறிக்கொண்டான்.  மீண்டும் எறும்புப் புதரை சரிசெய்து கட்டினான். தான் கொண்டு வந்த உரொட்டித் துண்டை தனது சட்டைப் பையிலிருந்து எடுத்து சிறிது சிறிதாக்கி எறும்புப் புதரைச் சுற்றிப் போட்டான்.



«Aha!» Gutten så at det var en maurtue som var ødelagt.

«Jeg vet hvordan det er å miste hjemmet sitt,» sa gutten, og feiet jorda tilbake på plass.

Deretter tok han en håndfull med brødsmuler ut av lomma og strødde det rundt til maurene.



எறும்புகள் உரொட்டித் துண்டை சாப்பிடுவதை இரசித்தபடியே படுத்து உறங்கினான்.

Mens maurene spiste brød, la gutten seg ned og sovnet.

மறுநாள் எழுந்த பையன் தொடர்ந்து செல்ல யோசித்தான். அப்போது எறும்புகள் அவனைச் சுற்றிக் கொண்டன.

"நீ எமக்கு உதவி செய்ததற்கு மிக்க நன்றி. நாம் இதனை மறக்க மாட்டோம். நாங்கள் உனக்கு எப்போதாவது உதவி செய்வோம் என உறுதி கூறுகிறோம்" என்றன.

"உங்களால் எனக்கு எப்படி உதவி செய்ய முடியும்"? எனச் சிரித்தபடியே கூறிய பையன் அவ்விடத்தை விட்டுப் போனான்.

Neste dag våknet gutten og gjorde seg klar til å dra videre.

Da samlet maurene seg rundt ham og sa: *«Takk for at du var snill og grei,*

*vi skal aldri glemme deg.*

*Vi lover å komme og hjelpe deg». «Hvordan skal dere hjelpe meg?» sa*

*gutten smilende og fortsatte på sin vei.*





அவன் பெரும் புல்வெளியின் ஊடாக நிறைய தங்க நிறமீன்கள் இருக்கும் நதிக் கரையோரம் வந்து சேர்ந்தான்.

Han gikk gjennom skog og mark, helt til han kom til en elv - full av fisk - gullfisk!



பையனைக் கண்டவுடன் தங்க நிறமீன்கள் பயந்தன. தங்களைப் பிடித்து இப் பையன் சாப்பிடப் போகிறான் என மீன்கள் நினைத்தன. அதனால் அவ்விடத்தை விட்டுப் போக அவசரமாக நீந்தின.

"வீட்டை இழந்தால் எப்படி இருக்கும் என எனக்குத் தெரியும்" எனப் பையன் மீண்டும் கூறினான்.

தான் கொண்டு வந்த உரொட்டித் துண்டை தனது சட்டைப் பையிலிருந்து எடுத்து சிறிது சிறிதாக்கி நீரில் எறிந்தான்.

Da gullfiskene så gutten, ble de så redde. De trodde at gutten skulle fange dem og spise dem opp.

Dermed begynte de å svømme fort av sted. «Jeg vet hvordan det er å måtte forlate sitt hjem,» sa gutten.

Dermed tok han en håndfull med brødsmuler ut av lomma si og kastet det ned i vannet.

மீன்கள் இடிபட்டுக் கொண்டு மள மளவென உரொட்டித் துண்டுகளை உண்டன.

Fiskene luktet brødet, snudde seg og svømte fort tilbake mens de krasjet i hverandre.
De begynte å sloss om maten og spiste grådig opp alt sammen.





பையன் அதனைப் பார்த்து இரசித்தபடியே படுத்து உறங்கினான்.

Gutten smilte, la seg ned og sovnet.



மறுநாள் எழுந்த பையன் தொடர்ந்து செல்ல யோசித்தான்.

Neste dag våknet gutten og gjorde seg klar til å dra videre.



அப்போது மீன்கள் தலையை நீரின் மேல் உயர்த்தியபடியே கூறின: “ உதவிக்கு மிக்க நன்றி. நீ மிகவும் நல்லவன். நாம் இதனை மறக்க மாட்டோம். நாங்கள் உனக்கு எப்போதாவது உதவி செய்வோம் என உறுதி கூறுகிறோம்” என்றன. “ஹஹா “ உங்களால் எனக்கு எப்படி உதவி செய்ய முடியும்”? எனச் சிரித்தபடியே கூறிய பையன் அவ்விடத்தை விட்டுப் போனான்.

Da stakk fiskene hodene opp av vannet og sa: «Takk for at du var snill og grei, vi skal aldri glemme deg. Vi lover å komme og hjelpe deg». «He, he, hvordan skal dere hjelpe meg?” sa gutten og fortsatte på sin vei.

அவன் நடநட என

நடந்து பற்றைகள்

புதர்களைக் கடந்து
களைத்து விட்டான்.
இறுதியில் ஓர் பெரிய
மரத்தின் கீழப்;படுத்து
உறங்கினான்.



Skomakersønnen gikk gjennom mark og eng, helt til han kom til et stort tre. Da var han så sliten at han la seg under treet for å sove.

“ஸ்ஸ்ஸ” என்ற சத்தம் கேட்டு எழுந்து சுற்று முற்றும் பார்த்தான். அவனது தலைக்கு மேல் தேனீக்கள் சுற்றி வட்டமிட்டன. “ என்ன நடந்திருக்கும்? என யோசித்தான்.

ஆகா. அங்கே ஒரு மரப்பொந்திலிருந்து தேனியின் கூடு ஒன்று உடைந்து தொங்குவதைக் கண்டான். “வீட்டை இழந்தால் எப்படி இருக்கும் என எனக்குத் தெரியும்” எனக் கூறிக்கொண்டான். மீண்டும் தேனியின் கூட்டை சரி செய்து கட்டிவிட்டான். இனித் தேனீக்கள் தேனைச் சேகரித்து தனது கூட்டில் வாழ முடியும்,



«Bzzzzzzz,» hørte han plutselig. Han reiste seg og så seg rundt. Over hodet hans virvlet det mange bier til alle kanter.

«Hva har skjedd?» tenkte han.

«Aha!» Han la merke til noen bikuber som var dratt ut av trehuler, og bivoks som hadde blitt kastet rundt omkring.

«Jeg vet hvordan det er å miste et hjem,» sa gutten og satte kubene sammen igjen. Nå kunne biene samle honning og legge egg igjen.

தன்னிடமிருந்த மிகுதி
உரொட்டித் துண்டை
தனது சட்டைப்
பையிலிருந்து எடுத்து
தேன் கூட்டில்
போட்டான்.



Så tok han frem de siste
brødsmulene som han fant
nedi lomma, og matet biene.

பின்பு படுத்து
நன்றாக
உறங்கினான்.



Deretter sovnet han.

மறுநாள் காலை எழுந்த பையனுக்கு மிகவும் பசி எடுத்தது. அவனிடமிருந்த உரொட்டித் துண்டுகள் முடிந்து விட்டன. தான் எங்காவது போய் உணவு தேட வேண்டும் என நினைத்தான்.

அப்போது தேனீக்கள் அவனது தலையின் மேல் வட்டமிட்டபடி

யே கூறின: " உதவிக்கு மிக்க நன்றி. நீ மிகவும் நல்லவன். நாம் இதனை ஒருபோதும் மறக்க மாட்டோம். நாங்கள் உனக்கு எப்போதாவது உதவி செய்வோம் என உறுதி கூறுகிறோம்" என்றன. ஹஹா "உங்களால் எனக்கு எப்படி உதவி செய்ய முடியும்"? எனச் சிரித்தபடியே கூறிய பையன் அவ்விடத்தை விட்டுப் போனான்.



Neste dag sto gutten opp og merket at han var kjempesulten.

Han hadde ikke flere brødsmuler igjen. «Jeg må dra og finne noe mat,» sa han.

Da slo biene en sirkel rundt hodet hans og sa: *«Takk for at du var snill og grei, vi skal aldri glemme deg. Vi lover å komme og hjelpe deg». «Hvordan skal dere hjelpe meg?» sa gutten og fortsatte på sin vei.*

அவன் புல்வெளியின் ஊடாக நடந்து ஒரு நகரத்தை அடைந்தான். அந்த நகரத்தில் பல வீடுகள் இருந்தன. அவ் வீடுகளிற்கு மத்தியில் ஒரு பெரிய அரண்மனை ஒன்று இருந்தது. அரண்மனை நடுவினில் பெரிய கோபுரம் ஒன்று இருந்தது.



Han gikk gjennom mark og eng, helt til han kom til en by. I byen var det mange hus.
Midt mellom husene var det et slott. I midten av slottet var det et tårn.



அந்தப் பெரிய கோபுரத்தின் உச்சியில் ஓர் அறை இருந்தது.

Tårnet var kjempehøyt og oppe i tårnet var det et rom.

அந்த அறையில் அழகான இளவரசி ஒருவர் இருந்தார். இளவரசி அவ் அறையில் அடைக்கப்பட்டிருந்தார். அறையின் திறப்பு தொலைந்து விட்டது. திறப்பை கண்டு பிடிப்பவருக்கு இளவரசியை மணம்முடித்து வைப்பதாக இளரவசியின் தாயார் கூறினார்.



Inni rommet var det en vakker prinsesse. Hun var låst inne og nøkkelen var borte. Den som klarer å finne nøkkelen til rommet hennes, skulle få gifte seg med henne, hadde moren hennes sagt.



பையன் முயற்சி செய்ய எண்ணினான். அவன் அரண்மனைக் கதவைத் தட்டினான்.

Skomakergutten ville ta sjansen. Derfor dro han til slottet og banket på.

இளவரசியின் தாயார் கதவைத் திறந்தார்.
அவரிற்கு பெரிய காதுகள், சப்பை மூக்கு,
தலையில் பெரிய கறுப்புத்தொப்பி, கால்களின்
நடுவே ஒரு கூட்டுமாறு வைத்திருந்தார்.
உண்மையில் அது ஒரு சூனியக்காரியாகும்!

Moren til prinsessa åpnet døra.

Hun hadde store ører, krokete nese, svart stor hatt på hodet og en feiekost mellom bena.

Hun var rett og slett en heks!



“எனது மகளை திருமணம் செய்யப் போகிறாயா”? என சூனியக்காரி கேட்டாள். பையனும் நடுங்கியபடியே ஆம் என்று கூறினான். “அப்போது நீ மூன்று போட்டியில் வெற்றி பெற வேண்டும். ஏதாவது ஒன்றில் தோற்றாலும் உனது தலையை திருகி எறிந்து விடுவேன்” எனச் சூனியக்காரி கூறினாள். பையனும் “என்ன செய்ய வேண்டும்” எனப் பயத்துடன் கேட்டான்.

«Er du her for å gifte deg med prinsessa?» spurte heksa.

«Ja,» svarte Skomakergutten skjelvende.

«Da må du greie å gjøre tre oppgaver,” sa heksa.

«Hvis du ikke klarer en av dem, vil jeg vri om halsen på deg!»

«Gi meg oppgavene,» sa Skomakergutten redd.



மணலுடன் கடுகு விதைகள் கலந்த பெரும் குவியலை பையன் முன் கொட்டினாள் சூனியக்காரி. “நீ இந்த கடுகை மணலிலிருந்து சூரியன் மறையும் முன் பிரித்தெடுக்க வேண்டும். இல்லையெனில் உனது கழுத்தைத் திருகி எறிந்து விடுவேன்”. எனக் கூறினாள்.



Da tømte heksa en haug med sand og masse bittesmå valmuefrø foran ham.

«Du skal skille sanden fra valmuefrøene,» sa heksa.

«Rekker du det ikke til solnedgang, vrir jeg om halsen på deg!»

பையனும் ஒவ்வொன்றாக கடுகினை மணலிலிருந்து பொறுக்கத் தொடங்கினான். பொறுக்கோ பொறுக்கென்று பொறுக்கிக் கொண்டே இருந்தான். சூரியன் மறையத் தொடங்கியது. "இன்னமும் அப்படியே பெரிய குவியல் இருக்கிறதே. எனக்கு இதற்கு மேல் முடியாது. சூனியக்காரி எனது கழுத்தை திருகப் போகிறாள்" எனக் களைப்புடன் பையன் கூறினான்.திடீரென அவனது விரல்களை யாரோ தடவுவது போல் உணர்ந்தான். அங்கே எறும்புகள் அவனிற்கு உதவி செய்வதற்காக வந்திருந்தன.



Gutten satte i gang. Han tok ett og ett av valmuefrøene ut fra sanda.

Han jobbet og jobbet, helt til sola begynte å gå ned. «Det er fortsatt masse igjen,» sa gutten sliten.

«Jeg klarer ikke mer. Nå kommer heksa til å vri om halsen på meg!”

Plutselig følte han noe som rørte på seg. Det var maurene som hadde kommet for å hjelpe ham!



எறும்புகள் கடுகினை மணலிலிருந்து பொறுக்கத் தொடங்கின. ஒன்று  இரண்டு மூன்று என எண்ணுவதற்குள் வேலை முடிந்து விட்டது.



Maurene satte i gang og skilte valmuefrøene fra sanda. Og på én, to, og tre var jobben gjort!

பையன் வாளியைத் தூக்கிக் கொண்டு சூனியக்காரியிடம் ஓடினான். “உனக்கு இப்போது அதிஸ்டம் இருந்திருக்கிறது” என எரிச்சலுடன் கூறினாள் சூனியக்காரி.

Gutten tok med seg bøtta med valmuefrø, fri for sand, og løp til heksa. «Nå hadde du flaks!» sa heksa irritert.



சூனியக்காரி மறுநாள் பையனிற்கு இன்னும் கடினமான வேலை கொடுத்தாள். “இளவரசியின் அறைத்திறப்பு நதியில் விழுந்து வி;ட்டது.”அதனைக் கண்டு பிடித்துக் கொண்டு வராவிட்டால் உனது கழுத்தை திருகி விடுவேன்;.”எனக் கூறியபடி பலமாகச் சிரித்தாள்.





Dagen etter ga heksa Skomakergutten en enda vanskeligere oppgave: «Nøkkelen til rommet til prinsessa har falt ned i elven. Finn den! Rekker du det ikke til i kveld, vrir jeg om halsen på deg!” sa heksa mens hun lo høyt.



பையன் விரைவாக நதிக்குப் போய் திறப்பைத் தேடத் தொடங்கினான்.ஆனால் அவனுக்கு நீந்தத் தெரியாது. "இப்போ என்ன செய்வது. சூனியக்காரி எனது கழுத்தை திருகப் போகிறாள்" எனக் கூறினான் பையன். சூரியனும் மறையத் தொடங்கியது.

Skomakergutten gikk til elven og begynte å lete etter nøkkelen. Men så kom han på at han ikke kunne svømme! «Hva skal jeg gjøre nå, heksa kommer til å vri om halsen på meg», sa gutten i det sola begynte å gå ned.



திடீரென யாரோ அவனுடைய முகத்தில் நீரைத் தெளித்தனர். அவன் நதிக்குள் பார்த்தான்.



Plutselig sprutet det noen vanndråper i ansiktet hans. Han så ned i elven.



அங்கே தங்க நிறமீன்கள் உதவி செய்வதற்காக வந்திருந்தன.

Der var alle gullfiskene! De hadde kommet for å hjelpe ham.



மீன்கள் நதியின் அடியில் நீந்தி மணலில் புதைந்திருந்த திறப்பைக் கண்டன.

Fiskene svømte til bunnen og fant nøkkelen som var gravd ned i sandbunnen.



திறப்பினை பையனிடம் கொடுத்தன.

De ga nøkkelen til gutten.

பையன் திறப்பை வாங்கிக் கொண்டு சூனியக்காரியிடம் ஓடினான். “இப்போ உனக்கு அதிஸ்டம் இருந்திருக்கிறது” என மிகவும் எரிச்சலுடன் கூறினாள் சூனியக்காரி.

Gutten sprang bort til heksa og sa: «Jeg har nøkkelen!» «Nå hadde du flaks,» sa heksa enda mer irritert.



மறுநாள் சூனியக்காரியின் கூட்டுமாறில் பையனும் ஏறி அமர்ந்தான். கோபுரத்தின் நுனிக்குப் பறந்து போனார்கள். திறப்பினால் கதவைத் திறந்து இளவரசியின் அறைக்குள் சென்றனர்.

Så satte Skomakergutten og heksa seg

på feiekosten til heksa og fløy opp trappa

til slottstårnet.

De satte inn nøkkelen og åpnet døra

til prinsessens kammer.



அங்கே மூன்று பெண்கள் நீண்ட வெள்ளைத் துணியால் தலையை மூடியிருந்தனர். மூவரும் ஒரே மாதிரி இருந்தனர். "இவர்களில் நீ இளவரசியை கண்டு பிடித்தால் அவரை உனக்குத் திருமணம் செய்து வைப்பேன். பிழையாகக் கண்டு பிடித்தால் உனது கழுத்தைத் திருகி விடுவேன்" என்றால் சூனியக்காரி. "இவர்கள் ஒரே மாதிரியாக இருக்கிறார்களே. இப்போ சூனியக்காரி எனது கழுத்தை திருகப் போகிறாள்" என நினைத்தான் பையன்.



Der satt det tre kvinner dekket med lange, hvite slør. Alle så like ut! «Hvis du gjetter hvem som er prinsessa, kan du gifte deg med henne.

*Gjetter du feil, vrir jeg om halsen på deg!» sa heksa «De ser jo helt like ut!» sa gutten. Nå kommer heksa til å vri om halsen på meg!»*

திடீரென “ஸ்ஸ்ஸ்ஸ்” எனச் சத்தம் கேட்டது.
அவன் மேலேயும் ஜன்னல் வழியாகவும் பார்த்தான். தேனீக்கள் ஒன்றன்பின் ஒன்றாக அறைக்குள் வந்தன.

«Bzzzzzzzzzzz», hørte han plutselig.
Han så opp, og inn gjennom vinduet fløy det inn bier, den ene etter den andre. Plutselig var alle biene der!



அவை அந்த மறைப்புக்கள் இருந்த மூன்று பெண்களின் தலையைச் சுற்றிய பின் ஒரு பெண்ணின் தலையில் அழகான தங்கக்கிரீடம் ஒன்றினை செய்தன." இவர் தான் இளவரசி" "தங்கக்கீரிடம் போட்டிருப்பவரே இளவரசி" எனச் சுட்டிக் காட்டினான்.

Biene svermet rundt en av de tre tilslørte kvinnene, og sammen formet de en vakker gullkrone over hodet hennes. «Det er prinsessa! Hun med gullkronen på!» sa gutten og pekte på hun som var omsvermet av biene.





அந்தப் பெண்கள் முகத்தை மூடியிருந்த திரைச்சீலையை எடுத்தனர். பையன் சரியான பெண்ணையே காட்டினான். "இப்போது உனக்கு நல்ல அதிஸ்டம் தான்" என சூனியக்காரி எரிச்சலுடன் கூறினாள்.

Kvinnene fjernet ansiktsslørene sine, og det viste seg at gutten hadde gjettet riktig.
«Nå hadde du jammen meg flaks!» sa heksa sint og irritert.

செருப்புத்தைப்பவரின் மகன் இளவரசியை திருமணம் செய்தான். அந்த நாட்டின் அரசனும் ஆனான்.

அன்றிலிருந்து தந்தையோ, சூனியக்காரியோ அவனிடம் கோபம் கொள்வதில்லை, கதையும் முடிந்தது விடி வெள்ளியும் வந்தது.

Heksa holdt ord og Skomakergutten fikk gifte seg med prinsessa og ble konge i landet.
Etter den dagen var det ingen sinte skomakere eller onde hekser som plaget dem lenger.

Snipp snapp snute, så var eventyret ute.







Finn flere fortellinger på

nafo.oslomet.no

Fortellingen er laget med illustrasjoner fra Svetlana Voronkova